விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்திய - சர்வோதய இலட்சியங்களுக்க மைய கிராமங்களிலும் நகரங் களிலும் சேவை செய்வ தற்கு ஊழியர்கள் தேவை விபரங்களுக்கு:-
காந்தி நிலயம்
உருத்திரபுரம்

மலர் 8 | காந்தி நிலயம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 101) 1971 மார்ச் | இழ் 6

# ஆன்மாவை சிறையிலிருந்து விடுதலை செய்

இன்றுபணம்யாவற்றையும் விழுங்கி விட்டது! இதன் பயனுக யாருக்கும் இன்பமில்லை! எனக்கு ஒரு வக்கீல்நண்பர் உள்ளார். அவர்தந்தையும் இன்னமும்நீதிமன்றத்திற்குச்சென்றுதொழில் நடத்துகிருர். அவர்மகனும் வக்கீல் தொழில் நடத்துகிருர். உயிருள்ள வரை பணம் சம்பாதிப்பதைவிடவேறு ஒரு எண்ணமும் அவர்கள் உள்ளத்தில் எழுவதில்லை. மற்றெல்லா விஷயங்களிலும் பற்றுதலில்லாதசெயல் ஏற்பட்டு விடுகிறது. மேலிருந்து எவ்வளவு தண்ணீர் ஊற்றினுலும் நிரம்பமுடியாத ஒரு துவாரம் போன்றது இது.

இதைப்போல் எந்த மனிதனும் ஒரு பொழுதும் " நான் பூரணதிருப்தி அடைந்துவிட்டேன்இனிஎனக்குஎவ்வித சிற்றின்பங்களும்நுகர்தல்வேண்டாம்!' என்று கூற மாட்டான். "நான்எல்லா இன்பங்களும் நுகர்ந்தாகி விட்டது, எனது மகனுக்குத் திருமணம் மட்டும் ஆகி விட்டால் போதும்!" என்பான் மற்ருெருவன் எனது மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. ஆனுல் இப்பொழுது அவன் மனைவி கர்ப்பவதியாயிருக்கிருள்!" என்பான். மூன்ருவது நபர் எனக்கு இம்மாதிரி எவ்வித கவலையும் இல்லை. ஆனுல் என்மகன் இப்பொழுது அடிக்கடி நோய்வாய்ப்பட்டு விடுகிருன்" என்பான்

மனிதன் இம்மாதிரி கவலைகளிலிருந்து என்று விடுபடுவான்?ஒரு நாள் காலன்வந்து அழைத்தவுடன் கெண்டு சென்று விடுவான். அப்பொழுது நீ என்னுடன் வந்து தான்தீர வேண்டும். ஆனுல்கவலைப்படவேண்டாம். இன்பங்களை நுகர வேண்டுமென்று உனது இந்திரிய வாசனைகள் பாக்கி இருக்குமேயானுல் அது இந்த மனித உடலில் ஒரு பொழுதும்திருப்தியடையப் போவதில்லை. ஆகையால், "உன்னை அடுத்த




பிறவியில் கழுதையாகப் பிறக்கச் செய்கிறேன். அப்பொழுதுஉனது சிற்றின்ப வாசனைகள் திருப்தியடையும்" என்று காலதேவன் ஆறுதலும் அளிப்பான்.

பிறரிடம் போட்டியிட்டுப் போரிட வேண்டும் என்று ஆத்திரம் படைத்தவனுக்கு மனித ஜன்மத்தில் அது பூர்த்தியடையாது. அதற்காக ஓ நாயின் ஜன்மம் தகுந்ததாயிருக்கும். இந்த வாசனைகள் அந்தந்தஜன்மத்தில்தீர்ந்து விடுபவை யல்ல. இந்த வாசனைகள் தானுகவேமாய்ந்துபோம்என்றுஎண்ணுவதுவீண். நாமே அழிந்து போவோமே தவிர அந்த வாசனைகள் நீடித்து நிலைத்திருக்கும். ஆகையால் அவைகளை விவேகத்தின் மூலம், வைராக்கியத்தால். தீவிர சிந்தனைசெய்துவெல்லவேண்டும் நீங்கள்இதற்கென்று சிறிதேனும்வேலை செய்வீர்களாயினும் கூட நாடு மேன்மை பெறும்.

விஞேபாஜி நிலப் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று மக்கள் சொல்கின்றனர், விஞேபாஜியின் பிரச்சினைஇன்று இங்கே இப்பொழுதே தீர்ந்துவிடும். ஆனுல்அவர் மக்களிடையே பரவலான ஆன்மீக எழுச்சி பரவ வேண்டும் என்றுமுயன்றுவருகிருர். மக்களிடையே பரோபகார எண்ணம் வளர்ந்து அவர்கள் ஆன்மா பரந்து விளங்க வேண்டுமென்றுஅவர் விரும்புகிருர். வீட்டிற்கு வெளியே சற்று நோக்கினுல் உண்மை இன்பத்தின் அருள் பெறலாம். சிறைவாசம்அனுபவித்துள்ளவர்கள் விடுதலை பெற்றுசிறைக்குவெளியேவந்தால்வெளியுலகக்காற்றுஎத்துணை இன்பமயமானது என்றுஅனுபவித்தறிவார்கள்.

அதே போன்று குறுகிய வீட்டுக்குள் அடைபட்டுள்ள ஆன்மாவும்சிறையிலடைபட்டதற்கொப்பானதுதான்! அவன் சற்று சிறையை விட்டு வெளியேறி, காண்பதெல்லாம் தனது, தான் எல்லோருக்கும் சொந்தம் என்ற எண்ணத்தை வளர்ப்பானுயின் ஒரேதாவில் அழிவில்லா இன்பத்தையடையலாம்!

— விஞேபாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 101
1971 மார்ச்

# அன்பும் — அறமும்

தமிழரிடை நெடுங்காலமாக வழங்கிவரும் ஒரு சொற்றொடர் ''அன்பும் அறமும்'' என்பது. நெடுக நெடுகக் கருத்தின்றியும் அந்தரங்கமாக அழுந்திய மன ஈடுபாடுமின்றிப் பலர் இச்சொற்களை ஒருசம்பிரதாய முறைப்படி சொல்லி வருகிறார்கள். வள்ளுவரோடு பிறந்த இச்சொற்றொடர் பின்னர் அறம் போதிக்க முனைந்த பலராலும் கையாளப்பட்டு வருகின்றது.

அன்பு கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். அறமும் இருக்க வேண்டும் என்றும் சொல்வார்கள். ஆயின் இந்த இரண்டையும் ஏன் சேர்த்துச்சொல்ல வேண்டும்? அவற்றை ஏன் அந்த முறையில் சொல்ல வேண்டும்? இதை நாம் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அன்பைப் பற்றியும் அறத்தைப் பற்றியும் வள்ளுவர் தனித்தனி கூறியுள்ளார். அறத்துப்பாலில் அறத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளார். இல்லறத்தில் அன்பைப் பற்றிக்கூறுகின்றார். ஆயினும் இங்கு அறத்திற்கு முதலிடம் கொடுக்கப் பட்டுள்ளதை நாம் மறந்து விடலாகாது. இல்வாழ்க்கையில் அன்பும் அறமும் ஒருமிக்க எடுத்துக் கூறப்பட்டுள்ளன. புதல்வரைப் பெறுதலுக்குப் பின்னர் அன்பு தோன்றுகின்றது. ஆயினும் துறவறத்திற்கு முதற்படியாக அருள் கூறப்படுகிறது. இல்லறத்திற்கு அன்பும் துறவறத்திற்கு அருளும் முதற்கண் வேண்டுமென்கின்றார் பரிமேலழகர். அன்பின் கனிந்து விரிந்த எல்லை கொண்டால் அருளாகும். தொடர்பில்லாத வழியும் உயிர்களிடத்துச்செல்லும் கருணைதான் அருள். தான் மற்றையவற்றினின்றும் பிறிதல்லன் எனனும் கண்ணோட்டம் தான் அருள்.

எனவே இல்லறம் துறவறம் என்னும் இரண்டிற்கும் முதல்படி அன்பு. அன்பிலிருந்துதான் அறம் தொடங்க வேண்டும். அறம் என்றால் என்ன? அது சமதர்மமா? சமுதாய வாதமா? மக்களாட்சியா? சர்வோதயமா? என்று கருத்து முரண்பாடுகள் தோன்றலாம். அறம் இவை அன்று. பழைய வைதிக சமயங்கள் தான் அறம் என்று சிலர் கூறலாம். இவை இரண்டுமல்ல; சமதர்மத்திலும் ஒரு புதிய கிளை என்று ஒருவர் சொல்லலாம். தீவிர புரட்சி வாதம், அரசன்மை ஆகியவைதான் சிறந்த அறநெறிகள் என்று சிலர் கூறலாம். திருவள்ளுவர் நெறி உலக நெறி எனலாம் ஒருவர். மனுநீதி உயர்ந்தது எனலாம் ஒருவர். யார் இவர்களின் பிணக்கைத்தீர்ப்பது?

இந்தக்கேள்வியை எழுப்பிச் சிந்திப்போமானால் ஓர் அரிய உண்மை நமக்குப் புலனாகும்.

குறிப்பிட்ட ஒரு அறநெறி சிறந்ததென்று சொல்பவர், அந்த நெறி சிறந்ததென்று சொல்வதிலேயே தம் முழுப் பலத்தையும் பிரயோகிப்பார். அதன் உயர்ச்சியையே பெரிதென எண்ணி மற்றை வகை அறங்களைக் குறைவு படுத்துவர் ; பகைப்பர் ; அழிக்க முனைவர்.

எல்லா வகை அறநெறிகளும் மனிதனின் பொருளியல், சமூகவியல், ஆன்மவியல் முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. எவ்வழியாலும் முன்னேற்றப்பட வேண்டியவன் மனிதன் என்று நாம் உணர்ந்தால் பகைமைக்குப் பூசலுக்கு இடமில்லை. இந்த உணர்ச்சிக்கு ஆதாரமாய் நிற்கக்கூடியது எது? அது தான் அன்பு.

அறத்தின், இயல்பு, தன்மை, சிறப்பியல்புகள் யாவற்றையும் நாம் மறந்து, மக்கள் பால் அன்பு கொள்ள, அன்பு காட்ட நாம் பயின்றோமானால் அறம் அடுத்து வரும். அன்பிற்கு வகையில்லை; பிரிந்து பட்ட கிளைகளில்லை, அன்பு அன்புதான். தன் இல்லத்தோடு மட்டும் அன்பு கட்டுப் பட்டு நின்று விடுமா? இன்றைய உலகம் பருமனில் மிகச் சுருங்கி பெரிய ஒரு குடும்பமாகும் இயல்பைப் பெற்று விட்டது. தேசிய அரசுகளின் சட்ட திட்டங்கள் இல்லங்களை உணவு, உடை உறையுள், கல்வி, மக்கள் தொகை எல்லாவற்றாலும் கட்டுப்படுத்துகிறது. எனவே இல்லறம் என்பது இப்பொழுது பரந்து பட்ட ஓர் அறமாகின்றது. துறவறம் இப்பொழுது நலிந்து, மக்களாட்சி முறையோடு அரசறமாக மாறிவிட்டது.

இல்லறம் துறவறம் இரண்டிற்கும் இடைப்பட்ட அரசறம்தான் நம் பெரிய அறமாக இப்பொழுது விளங்குகின்றது. இந்த அரசறம் பொருளியல் முறையில், சமூகவியல் முறையில் வெவ்வேறு திசைகளில் வளரக் கூடிய வாய்ப்புக்கள் கொண்டது. இத்திசைகளைப்பற்றி நாம் அதிகம் கவனம் செலுத்தாது, முக்கியமாகக் குடிமக்கள் யாவர் மேலும் அன்பு கொண்ட ஓர் அறத்தை வளர்க்க முனைந்தோமானால் அதுவே பேரறமாகும்.

அன்பு கலவாத எந்த அறமும் தலைஎடுக்காது. அன்பில்லா அறத்தை நிலைநாட்டல் கடினம்; அதனிலும் கடினம் அதனைப் பேணிவளர்த்தல். வரலாறுமுழுவதும் பகைமையினாலும் போரினாலும், வன்முறையினாலும் ''அறங்கள்'' என்று சொல்லப் படுவன அமைக்கப்பெற்றன. அவைமக்களை நல்வழிப் படுத்தினவா? இன்னும் சில இடங்களில் வன்முறையினால் புதிய அறங்கள் நிலைநாட்ட முயற்சி எடுக்கப்படு கின்றது? இது அறத்தின் இயல்பை அறியாத மடமையினால் எழுந்த முயற்சியாகும்.

வன் செயலால் அரசுகள் நிறுவி அறங்கள் வளர்க்கமுனைந்தது எல்லாம் போதும். அன்பினால் அறங்கள் வளர்க்க முனைவோம். அன்பினால் செயற்படும் அறம் எவ்வகையிலும் எவர்க்கும் தீங்கு செய்யாது.

—இ. இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வோதய அரசியல்

''இன்று நமது சுயராஜ்யம் ஒரு சார்பினருக்கு மட்டும் சொந்தமானதாக இருக்கிறது. இந்த சுயராஜ்யம் மக்கள் எல்லோருக்குமானதாகஇல்லை. இன்று நாட்டில்காணும் வன்முறை, நாசவேலை எல்லாவற்றுக்குமே கட்சி அரசியல் முறைதான் காரணமாகும். மக்களுடைய அரசியல் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு கட்சிகள் மக்களைச் சுரண்டுகிறது. தேர்தல் செலவுமுறையே ஒருவிதமான அரசியல் சுரண்டலுக்கு வழி வகுக்கிறது. பிரதிநிதிகள் மக்களின் சேவகர்கள் தான். மக்களே உண்மையான எஜமானர்கள். இவர்கள்தான் ஜனநாயகத்திற்கும் எஜமானர்கள்.'' என்று திரு. கோரா ராமச்சந்திரராவ் மதுரையில் பத்திரிகையாளரிடையே பேசும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியபோது கூறியதாவது:

''இன்றைய அரசியல் கட்சிமுறையின் கேலிக்கூத்தைப் பாருங்கள். ஒரு மாநிலத்தில் 300 சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால் 151 பிரதிநிதிகள் ஒரு கட்சியைச் சேர்ந்தவரெனில் அக்கட்சிக் கூட்டத்தில் 76 பேர் ஆதரிக்கும் ஒருவர் கட்சிக்கட்டுப்பாட்டின் பெயரில் முதல்வர் ஆகிவிடுகிறார். ஆகவே 300 சட்டமன்ற உறுப்பினர் உள்ளசபையில். 80 பேர்களுடைய ஆதரவுடன் ஒருவர் ஆட்சிபீடம் ஏறிவிடுகிறார். இது எவ்வாறு ஜனநாயகமாகமுடியும். கட்சி அரசியலில் கட்சிக்கட்டுப்பாடு, கொரடாவின் பெயரால் அங்கத்தினர் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே இந்த நிலைமையை மாற்றி அமைக்கவேண்டும். இதற்கு சத்தியகிரகம், வாக்காளர் கல்விமூலம் மக்கள் கருத்தை கட்சிகளற்ற அரசியல் முறைக்குச் சாதகமாக உருவாக்க வேண்டும். கொள்கைக்காக வாக்குகளையும் தியாகம் செய்துவிடும் நல்லவர்கள் தேர்தலில் பங்குகொள்ளுமாறு செய்யவேண்டும். கட்சி அரசியல் முறைக்கு எதிராக ஒருமனப்பட்டவர்களின் கூட்டத்தை உருவாக்க வேண்டும்.

உண்மையான மக்கள் ஆட்சிஏற்படவேண்டுமெனில் வேட்பாளர்களுக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும். கட்சிப்பிரதிநிதிகளுக்குப்பதிலாக மக்கள்- பிரதிநிதிகள் முறையைக் கொண்டுவர வேண்டும். பேராசையும் கட்சி நலனையும் குறிக்கோளாகக் கொண்ட இன்றைய முறைக்குப்பதிலாக உண்மையான மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி முறையை சர்வோதய அரசியல் வலியுறுத்துகிறது இப்பணியை இப்பொழுதே ஆரம்பிப்போம். இது ஒரு சிறிய தொடக்கமாயினும் கட்சிகளற்ற மக்களாட்சி சிந்தனைக்கு இவ்வேலைத்திட்டம் ஆற்றல் அளிக்கும்''

## சர்வோதய நிகேதன கட்டட நிதி

இரத்மலானை இந்துக் கல்லூரிச் சதுக்கத்திலுள்ள சர்வோதய நிகேதனத்தில் காந்தி நூற்றாண்டு ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டுவரும் கட்டடத்திற்கு நன்கொடை அளித்த அன்பர்கள்.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| ஏற்கனவே வசூலான தெகை | 11,592 | 00 |
| திரு. என். கந்தசாமி ஈஸ் பெர்ஞந்து மாவத்த கொழும்பு—6 | 150 | 00 |
| மொத்தம் | 11,742 | 00 |

## சம்பத்துத்தானம்

இரத்மலானைசர்வோதயநிகேதனத்தில் இருக்கும் மாணவர்களின் செலவுக்காக சம்பத்துத்தானம் அளித்தவர்கள்.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திருமதி. ம. குமாரசாமி 7, மல்வத்தை அவென்யூ நுகேகொட | 20 | 00 |
| திரு. சி. யோ. சந்தியாபிள்ளை கட்டிடத்திணைக்களம கொழும்பு | 10 | 00 |
| திரு .இ. இரத்தினம் காலிவீதி கொழும்பு-4 | 10 | 00 |
| திருமதி. ச. தம்பிப்பிள்ளை 47ஆவது ஒழுங்கை கொழும்பு—6 | 10 | 00 |

## வரவு செலவு

அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளை சர்வோதய நிகேதனம் [ 1971 பெப்ரவரி ] வரவு செலவு விபரம்.

| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| கையிருப்பு | 1363 | 25 |
| சர்வோதயபாத்திரம் | | 90 |
| விடுதிக்கட்டணம் | 57 | 0 |
| காந்தீயம் | 4 | 00 |
| கட்டடம் | 175 | 00 |
| நாணுவிதம் | 30 | 00 |
| மொத்தம் | 1630 | 15 |
| **செலவு** | | |
| உணவு | 219 | 52 |
| பிரயாணம் | 65 | 60 |
| தபால் | 16 | 21 |
| சலூன் | 2 | 25 |
| மாணவர்செலவு | 99 | 42 |
| சர்வோதய அச்சகம் | 5 | 75 |
| நாணுவிதம் | | 60 |
| கோகுலம் | 9 | 40 |
| கட்டடம் (பால்பண்ணை) | 575 | 50 |
| வையித்தியம் | | 72 |
| காந்தீயம் | 25 | 00 |
| கமம் | 2 | 05 |
| சம்பளம்—கைச்செலவு | 10 | 00 |
| வெளிச்சம் | 74 | 80 |
| ஏற்ற-இறக்க | 3 | 00 |
| உபகரணம் | 3 | 80 |
| சிரமதானம் | 46 | 47 |
| எழுத்து உபகரணம் | | 18 |
| அச்சகக் கட தாசி | 4 | 00 |
| விழாச்செலவு | 15 | 00 |
| கையிருப்பு | 450 | 88 |
| மொத்தம் | 1630 | ·15 |


## தமிழகம்

திங்கள் இதழ்
சிறப்பாசிரியர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தனி இதழ்: 50 சதம்
ஆண்டுக்கட்டணம்: ரூபா 5 00
தகவல்கட்கு,
மேலாளர்
தமிழகம்
66 அ, தெற்காவணி மூலவீதி
மதுரை-1
தமிழ் நாடு.
இலங்கையில்
காந்தி நிலையம்
உருத்திரபுரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காந்திநிலையத்தில் கெயித்தான்ஜீ

அகில இந்திய சர்வோதய தலைவர்களில் ஒருவரான கலாநிதி ஆர்.ஆர். கெயித்தான் அவர்கள் 6.2.71 சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு உருத்திரபுரம் - காந்தி நிலையத்திற்கு வருகை தந்தபோது காந்தி நிலைய மாணவர்களும்உருத்திரபுரம் கிராம மக்களும் உற்சாகவரவேற்பளித்தனர். இவருடன் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் முன்நாள் தலைவர் திரு. கு. நேசையா அவர்களும் சமுகமளித்தார்.

கெயித்தான்ஜீ காந்தி நிலையத்திலுள்ள இலவச ஆயுள் வேத வயித்திய சாலை, மாணவர் விடுதி, நெசவு சாலை மரவேலை நிலையம், சமையல் அறை, உணவுச்சாலை, தடாகம்போன்றபெரிய கிணறு எல்லா வற்றையும் சுற்றிப் பார்த்துநல்லஅமைப்புஎனமகிழ்ந்தார்.

பின்னர் காந்தி நிலையத்தில் உள்ள அகில இலங்கைக் காந்தி சேவா சங்கக் காரியாலயத்தைப்பார்வையிட்டார். நண்பகல் கருத்தரங்கம் நடை பெற்றது. இக்கருத்தரங்கில் கிராம மக்கள் பாடசாலை மாணவர் ஆசிரியர், கன்னியாஸ்திரீகள் ஆகியோர் பங்குபற்றினர்கள். கெயித்தான்ஜீ ''சர்வோதய சமுதாயம்'' பற்றிக்கருத்துரை வழங்கினர்.

## இலங்கை இளைஞர் சம்மேளனம்

கடந்த ஜனவரி மாதம் 15 ஆம் திகதி கொழும்பு —சௌக்கியதான தலைமை அலுவலகத்தில், இலங்கையிலுள்ள பல நிறுவனங்களின் ஊழியர் கூடி தேசிய அபிவிருத்தித்திட்டங்களில் இளைஞர்களை ஈடுபடுத்தும் நோக்கத்துடன் ''இலங்கை இளைஞர் சம்மேளனம்'' என்னும் நிறுவனத்தை அமைத்தனர்.

லங்கா தர்மபால இளைஞர் மன்றம், லங்கா கிராம புனருத்தாரண சங்கம், இலங்கை தேசிய சேவை இயக்கம், இலங்கை சௌக்கியதான சேவை, அகில இலங்கைக்காந்திசேவா சங்கம் ஆகியவை பங்குபற்றின. இந்த இயக்கத்திற்கு வண. நிக்க ஹெட்டியே சந்ததோ பிக்கு தலைமை தாங்கினர்.

பொரளை பாராளுமன்ற உறுப்பினர் திருமதி குசலாஅபேவர்த்தன, திரு.கே.டீ. தயானந்த, திரு. பிரியன் தாபிரேமதிலக, திரு.தி.மு. ஜயவர்த்தன, திரு. சோ. க. தம்பிப்பிள்ளை ஆகியோர் கருத்துரை வழங்கினர்கள்.

## செய்திகள்

பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி சர்வோதயபாத்திர இயக்கம் மூலம் பெப்ரவரிமாதத்தில்40 கொத்து அரிசியும்14ரூபா59சதமும்கிடைத்துள்ளது

★ ★ ★

சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் 73 வீடுகளிலிருந்து 96கொத் அரிசியும் 12 ரூபா 95 சதமும் கிடைத்துள்ளது.

★ ★ ★

அகிலஇலங்கைக் காந்தி சேவா சங்க ஆதரவில் இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள காந்தி நூற்றுண்டுஞபகார்த்தநிறுவனமான சர்வோதய நிகேதனத்திலுள்ள மாணவர் இல்ல கௌரவமேற்பார்வையாளராகபெப்ரவரிமாதந்தொடக்கம்திரு. க. சதானந்தன் பி. எஸ். ஸி கோப்பாய் கடமையாற்றுகிறுர்.

★ ★ ★

அக்கரயான் குளம் காந்திக் கிராமத்தில் 6.4. 71தொடக்கம் ஐந்து நாட்கள் நடை பெறும் சிரமதான முகாமில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த சாரணர் இயக்க மாணவர்களும் ஆசிரியர்களும் பங்கு பற்றுவார்கள்.

## சர்வோதயத்தின் ஸ்வரூபம்

இதுவரை ஆக்கப்பட்டுள்ள சமுதாயம் நிறைவாக ஆக்கப்படவில்லை. குடும்ப உணர்ச்சி உண்மையாக நிலைத்துள்ளது. ஆயின் சமுதாயம் என்று சொல்லப்படுவது இன்னும் நிறுவப்படவில்லை. இந்தியாவில் சாதிகள் அமைந்துள்ளன. சமுதாயம் அமையவில்லை. ஒரு கிராமத்தில் இருபது சாதிகள் இருக்கின்றன. கிராமம் முழுதுமாய் சமுதாயம் இன்னும் உருவாகவில்லை. சாதிகள் ஒன்றை எதிர்க்கின்றன. ஒன்று குடும்பஉணர்ச்சியை விரித்துகிராம மக்கள் அனைவரும் ஒரு குடும் பத்தவரென்ற உணர்ச்சி உண்டாக்கப் படவேண்டும். சர்வோதயக்கொள்கையை ஏற்கின்றவர்கள் அனைவரும் அத்தகைய கிராம சமுதாயத்தைநிறுவ ஒன்றுபட வேண்டும்.

சாதிகளைப் பற்றிய அடிப்படைதத்துவங்கள் ஒன்றும் இல்லை. பிராமண சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் அதில்பரமஉலோபிகளும்உள்ளார்கள். உதாரகுண முடையவர்களும்நல்லவர்களும் உள்ளார்கள். ஒற்றுமையற்றஇத்தகைய சமுதாயத்தால் பயன் என்ன? ஆகையால் சாதிகள் அகன்றுகிராம சமுதாய உணர்ச்சி பரவ வேண்டுவதுஅவசிய மாகின்றது. இது சர்வோதயத்தினஒரு அடிப்படைசிந்தனை.

—ஆதாரம் கிராமோதயம்

## வாசித்துவிட்டீர்களா?

## பனையும் பயனும் ரூ. 2

## இனிக்கும் பதநீர் ரூ. 2

விபரங்களுக்கு-

காந்தி நிலையம்,

உருத்திரபுரம்

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்திசேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்புமெய்கண்டான் அச்சகலிமிடெட்டில்அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org